தனிப்பட்ட டிஜிட்டல் கணக்கு

நியதிகளும் நிபந்தனைகளும்

இந்நியதிகளும் நிபந்தனைகளும் (''நியதிகளும் நிபந்தனைகளும்'') தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி (''வங்கி'') இனால் விசேடமாக குறித்துரைக்கப்படும் விரிவினை தவிர்த்து வங்கியினால் வழங்கப்படும் டிஜிட்டல் அலைவரிசை ஊடாக கணக்குடைமையாளரினால் இதனகத்து பின்னர் திறக்கப்படும் எவ்வியல்பினதுமான ஒவ்வொரு கணக்கிற்கும் (''கணக்கு'') பிரயோகிக்கப்படும்.

எனக்கு அத்தகைய கணக்கு/களை திறப்பதற்கும் மற்றும் /அல்லது தொடருவதற்கும் மற்றும் /அல்லது வசதிகளை அளிக்கும் வங்கியை கருத்திற்கொண்டு, இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணைக்கப்பட உடன்படுகின்றேன். இந்நியதிகளும் நிபந்தனைகளும் ஒவ்வொருவரையும் தனித்தனியாகவும் அல்லது எவரேனும் ஒருவர் அல்லது பலர் அல்லது அவர்களது வாரிசுகள், நிறைவேற்றுநர்கள், நிருவாகிகள் மற்றும் சாற்றப்பட்டவர்கள் அல்லது அவர்கள் அனைவரையும் சுட்டாகவோ பிணைத்தல் வேண்டும். ஒருமையிலான விளிப்புகள் பன்மையையும் உள்ளடக்குவதுடன் அதன் மாறியாகவும் மற்றும் ஆண் பாலினத்தை குறிக்கும் வார்த்தைகள் பெண் பாலினத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

1. செயற்பாட்டு அறிவுறுத்தல்கள்

தனிப்பட்ட கணக்கு திறக்கும் படிவம் மற்றும் ஏதேனும் மேலதிக உரித்துக்கட்டளைகள் (தொகுதியாக ''உரித்துக்கட்டளைகள்'') காணப்படின் அவற்றின் பிரகாரம் வரையப்பெற்ற அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பேனைக் கையெழுத்து மற்றும் /அல்லது பௌதீக கையெழுத்து மற்றும் /அல்லது டிஜிட்டல் /இலத்திரனியல் கையெழுத்தினாலோ கையெழுத்திடப்பட்ட உடன்பட்ட அறிவுறுத்தல்கள் அல்லது ஆவணங்களின் மீது, பின்வருவனவற்றுக்கு முரணாக நான் வங்கிக்கு எழுத்துமூல அறிவித்தலை (டிஜிட்டல் வடிவிலோ வேறு வடிவங்களிலோ எழுத்தப்பட்டவை) வழங்கும் காலம் வரையில், தொழிற்பட வங்கிக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்:

i. காசோலைகள், பரிவர்த்தனை உண்டியல்கள், ..., நிலையியற் கட்டளைகள், நேரடி வைப்புகள், வரைவு வழங்கல்கள், மின்னஞ்சல் மற்றும் டெலிகிராபிக் பரிமாற்றங்கள், பிணையங்கள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களின் கொள்வனவு மற்றும் விற்பனைகள் மற்றும் கடன் அல்லது வேறுவகையிலாயினுஞ்சரி கணக்கினை (களை) பற்று வைப்பதற்கான ஏனைய ஏதேனும் அறிவுறுத்தல்கள், மற்றும் நிலுவை உறுதிப்படுத்தலுக்கான கோரிக்கைகளை மேற்கொள்வதற்காக: மற்றும்

ii. கணக்கினை மூடுவதற்கான அறிவுறுத்தல்கள் உள்ளிட்ட கணக்கு(கள்) தொடர்பான ஏதேனும் ஏனைய அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்வதற்கு. (செயற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

செயற்பாட்டு அறிவுறுத்தலின் ஏதேனும் மாற்றம் அல்லது மீளப்பெறலானது என்னால் மாத்திரமே வழங்கப்படும் என்பதற்கு உடன்படுகின்றேன்.

2. நடைமுறை கணக்கு/சேமிப்பு கணக்கு

(i). வங்கியானது, அதனது முழுமையான தற்றுணிபினில், நடைமுறைக் கணக்கின் பெயரில் எனக்கு காசேலைப் புத்தகமொன்றை வழங்கலாம். காசோலைப் புத்தகம் வழங்கப்பட்டதும் அதனது பாதுகாப்பான காவலுக்கு எல்லா நேரத்திலுமான அனைத்து பொறுப்புக்களையும் நான் பொறுப்பேற்பதுடன், அத்தகைய காசோலைப் புத்தகம் அல்லது, அதனடங்கிய ஏதேனும் காசோலைத் தாள் /தாள்கள் தொலைந்து அல்லது திருடப்பட்டாலே வங்கிக்கு நான் உடனடியாக அறியத்தருவேன். கணக்கினில் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்திற்கே காசோலைகளை வழங்கவும் பொறுப்பேற்கின்றேன். வங்கியானது அதனது முழுமையான தற்றுணிபினில், தொடர்புடைய காசோலையை/காசோலைகளை நான் தொலைத்துவிட்டாலோ அல்லது, சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டதும் வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான ஏனைய சூழ்நிலைகளிலும் என்னிடமிருந்தான ஏதேனும் காசோலை நிறுத்த அறிவுறுத்தலை (வாய்மொழியாகவோ அல்லது எழுத்திலோ) ஏற்கும் என்பதனை நான் புரிந்துக்கொண்டுள்ளேன். ஏதேனும் வாய்மொழி கோரிக்கைகள் அதே தினத்தில் எழுத்துமூல உறுதிப்படுத்தலை (டிஜிட்டல் வடிவில் அல்லது ஏனையவகைகளில் எழுத்தப்பட்டது) தொடரவேண்டும். ஏதேனும் அத்தகைய அறிவுறுத்தலை என்னிடமிருந்து அல்லது, நான் எனக்கருதப்படத்தக்க எவரேனும் ஏனைய நபர்களிடமிருந்தான கோரிக்கையை வங்கி ஏற்றுக்கொள்வதில், இதன் விளைவாக, அல்லது இதனுடன் தொடர்புடையதாக இதனால் உறப்பட்ட ஏதேனும் இழப்பு, சேதம்,

செலவீனம் (சட்ட செலவீனங்கள் உள்ளடங்கலாக) அல்லது கேள்விகளிற்கு எதிராக வங்கியை ஈட்டுறுதிப்படுத்த இத்தால் நான் பொறுப்பேற்கின்றேன்.

(ii) மேலுள்ள கணக்கு(கள்) தொடர்பில் எழுகின்ற ஏதேனும் மிகைவரைவு அல்லது ஏனைய வசதிகளுக்கு நான் பொறுப்பாகவிருப்பேன் என்பதுடன் அதனுடன் தொடர்புடையதாக உறப்படும் அனைத்து அல்லது ஏதேனும் வட்டி (கூட்டு வட்டி உள்ளடங்கலாக), தரகுப்பணம் மற்றும் ஏனைய வங்கிக் கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் செலவுகள் (ஏதேனும் சட்ட செலவீனங்களை (உள்ளடங்கலாக) அதனது முழுமையான தற்றுணிபினில் காலத்திற்கு காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய வீதங்களில் அத்தகைய ஏதேனும் கணக்கில் (கணக்குகளில்) இருந்து பற்றுவைக்க வங்கிக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன். அத்தகைய ஏதேனும் தொகைகளை தன்னுடைய முழுமையான தற்றுணிபினில் வங்கியினால் கோரப்படுகின்ற அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய காலத்திலும் வங்கிக்கு செலுத்துவதற்கும் பொறுப்பேற்கின்றேன்.

(iii) அதனுடன் தொடர்புடைய ஏதேனும் மிகைவரைவு அல்லது ஏதேனும் ஏனைய வங்கிச்சேவை வசதிகள் நடைமுறையானதாக காணப்பட மேலுள்ள கணக்குக்கு வரவிடப்படும் ஏதேனும் மற்றும் அனைத்து தொகைகளும், செலுத்தப்படவேண்டிய ஏதேனும் வட்டியை (கூட்டு வட்டி உள்ளடங்கலாக), அவ்வட்டி முழுமையாக செலுத்தப்படும் வரையில் குறைப்பதற்கு வங்கியால் முதலில் பிரயோகிக்கப்படுதல்வேண்டும். அதன்பின்னர், அவ்வாறு வரவிடப்பட்ட ஏதேனும் அத்தகைய தொகைகளானது ஏதேனும் அத்தகைய மிகைவரைவு அல்லது ஏதேனும் ஏனைய வங்கிச்சேவை வசதிகளின் மூல தொகையை குறைப்பதற்காக பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(iv) கணக்கு தொடர்பில் அல்லது வங்கியினால் எனக்கு வழங்கப்பட்ட கணக்கு தொடர்பில் அல்லது ஏனைய ஏதேனும் வங்கிச்சேவை வசதிகள் தொடர்பில் அனைத்து வாடிக்கை வங்கிச்சேவை மற்றும் ஏனைய கட்டணங்கள் மற்றும் செலவுகளை தீர்ப்பனவாக்குவதற்கு அல்லது விதிப்பதற்கு, வங்கியின் சாதாரண வங்கிச்சேவை நடைமுறைகளுக்கு இணங்க தொடர்புடைய கணக்கிற்கு(கள்) பற்றுவைக்கவும் வங்கியானது எப்போதும் உரித்துடையதாதல்வேண்டும். ஏதேனும் அல்லது அனைத்து கணக்குகளினது முடிவுறுத்துகை/மூடலின் மீது அத்தகைய கட்டணங்கள் மீளவளிக்கப்படக்கூடியதல்ல என்பதற்கு நான் உடன்படுகின்றேன்.

(v) (அ) சொல்லப்பட்ட கணக்குக்கு மேற்கொள்ளப்பட்ட வரவு மற்றும் பற்றுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் வைப்புகளானவை இலங்கையின் காலத்திற்கு காலம் செல்லுபடியாகும் சட்டங்களினால் ஆளப்படுவதுடன் அவை வங்கிக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாள சான்று சமரப்பணத்திற்கு உட்பட்டும் வங்கியினால் காலத்திற்கு காலம் தீர்வையாக்கப்படும் ஏதேனும் வாடிக்கை கட்டணங்களின் கொடுப்பனவுகளுக்கு உட்பட்டும் வங்கியின் ஏதேனும் கிளையினில் செலுத்தத்தக்கவையாகவும் காணப்படுகின்றன என்பதனை நான் புரிந்துக்கொண்டுள்ளேன்.

(ஆ) அழைப்பு வைப்பு மீளப்பெறல்களானவை குறைந்தபட்சம் ஏழு (7) நாட்களிற்குள்ளான எழுத்துமூலமான அறிவித்தலை கோருவதுடன், அதனில் தவறின் நான் வட்டியை பெறுவதற்கு உரித்தாகமாட்டேன் என்பதனையும் நான் புரிந்துக்கொண்டுள்ளேன்.

(vi) (அ) சேமிப்பு/வைப்பு கணக்கு/கணக்குகளின் மீது செலுத்தப்படவேண்டிய ஏதேனும் வட்டி வீதமானது வங்கியினால் அதனது இலங்கை கிளைகளில்/ வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் காட்சிப்படுத்தப்படும் என்பதுடன் எனக்கான கிரம அறிவித்தலையும் உள்ளடக்கும்.

(ஆ) சேமிப்புக் கணக்குகளின் வட்டியானது நாளாந்த நிலுவையில் கணிக்கப்படும் என்பதுடன் கணக்கு/கள் கணிப்பிற்கான அத்தகைய ஒவ்வொரு நாளிலும் தேவைப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச நிலுவையை கொண்டிருந்தது என்பதாக மாதாந்தம் வரவிடப்படும். நடைமுறை கணக்குகளில் எஞ்சியிருக்கும் ஏதேனும் வரவு நிலுவைகளுக்கு வட்டி செலுத்தப்படாது.

(இ) வைப்பு கணக்கு/களின் வட்டியானது, நாளுக்கு நாளான நிலுவைகள், அல்லது வங்கியினால் ஏனைய வகையில் தீர்மானிக்கபடுகின்றவாறு (அதனுடைய முழுமையான தற்றுணிபினில்) உறப்படுவதுடன், தொடர்புடைய வைப்பு கணக்கு/களுக்கு அல்லது என்னால் அறிவுறுத்தப்பட்ட ஏனைய கணக்குகளுக்கு வங்கியினால் வரவிடப்படும்.

(vii) (அ) வங்கியானது, அதனுடைய முழுமையான தற்றுணிபினில், நிலையான வைப்புகளின் முதிர்வுக்கு முந்தைய மீளப்பெறல்களை அத்தகைய அறிவுறுத்தல் முற்றாக என்னால் வழங்கப்பட்டது என்பதன்பேரில் அனுமதிக்கும். அத்தகைய முதிர்வுக்கு முந்தைய அனைத்து மீளப்பெறல்களும் வங்கி தீர்மானிக்கின்ற தண்டப்பணம் மற்றும் கட்டணங்களின் தீர்வைக்கு உட்பட்டவை என்பதற்கு நான் உடன்படுகின்றேன்.

(ஆ) முரணுறு எழுத்துமூல அறிவுறுத்தல்கள் (டிஜிட்டல் வடிவம் அல்லது வேறுவகையில் எழுதப்பட்டது) முதிர்வு திகதிக்கு முன்னதான ஏழு (07) வேலை நாட்களுக்குள் பெறப்படவில்லையெனில், பின்னர் அனைத்து நிலையான வைப்புகளும் காலத்திலான தற்போதிருக்கும் வட்டி வீதத்திற்கு ஒத்த காலத்திற்கு தானாக புதுப்பிப்பிக்கப்படும்.

(viii) வங்கியானது என்னால் கோரப்பட்ட அத்தகைய இடைவெளிகளில் கணக்கின்(களின்) நிதிக்கூற்றுக்களை எனக்கு அனுப்பும் என்பதனை நான் புரிந்துக்கொண்டுள்ளேன். ஏதேனும் அறிவுறுத்தல்கள் இல்லையெனில், நிதிக்கூற்றுக்களானவை வங்கியின் சாதாரண வங்கிச்சேவை நடைமுறைகளுக்கு இணங்க வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்ற அத்தகைய இடைவெளிகளில் அக்கணக்குகளுக்காக அனுப்பிவைக்கப்படும். அதன்மீதான அனைத்து உள்ளீடுகளையும் கவனமாக பரிசீலிப்பதற்கு நான் முழுமையாக பொறுப்புடையவனாவேன் என்றும் என்னுடைய சொந்த பதிவுகள் மற்றும் அத்தகைய நிதிக்கூற்றுகளுக்கு இடையில் நான் நம்புகின்ற ஏதேனும் வித்தியாசங்களை அக்குறித்த நிதிக்கூற்றுத் திகதியின் பதினான்கு (14) நாட்களுக்குள் வங்கிக்கு எழுத்துமூல அறிவித்தலை (டிஜிட்டல் வடிவத்தில் அல்லது ஏனையவகையில் எழுதப்பட்டது) (பந்தி 5 இன் ஏற்பாடுகள் என்னவாயினும்) வங்கிக்கு வழங்கவேண்டும் என்பதற்கும் இத்தால் நான் உடன்படுகின்றேன். என்னிடமிருந்து அத்தகைய அறிவித்தல்கள் ஏதும் இல்லையெனில், கணக்கின்(களின்) தொடர்புடைய நிதிக்கூற்றுக்களது செம்மையை ஏற்றுக்கொண்டு பொருத்தமாக சான்றுப்படுத்தியுள்ளேன் (அனைத்து நோக்கங்களிலும்) என நான் கருதப்படவேண்டும். மேலுள்ளவற்றுக்கு தீங்கற்றதாகவும் இது தொடர்பில் வங்கி மீது ஏதேனும் கடப்பாடுகளை விதிக்காதும், அத்தகைய கணக்கின்(களின்) நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான ஏதேனும் தவறொன்றை வங்கி சமாந்தரமாக கண்டுபிடித்திருக்குமாயின், என்னுடைய ஏதேனும் கணக்கில்(குகளில்) அவ்வொத்தது வங்கியினால் அடையாளங்காணப்பட்ட விரைவிலேயே வரவிட அல்லது பற்றுவைப்பதினால் (பொருத்தமாக) சரிப்படுத்தப்படும் என்பதற்கு இத்தால் நான் உடன்படுகின்றேன்.

(ix) பின்வருவனவற்றிடமிருந்து பெறப்பட்டதான ஏதேனும் அல்லது அனைத்து விசாரணைகளுக்கும், எதிர்வினையாற்ற வங்கிக்கு அதிகாரமளிக்கின்றேன்:

(அ) எனக்கு/எமக்கான உசாவலின்றி ஏதேனும் ஏனைய வங்கிகள், கடன் தகவல் முகவரகங்கள் அல்லது கணக்குகளை கருத்திற்கொள்ளும் ஏதேனும் ஏனைய அதிகாரசபை. சந்தேகங்களை தவிர்ப்பதற்காக ஏதேனும் அத்தகைய எதிர்வினையானது வங்கி உசாவல்களையும் உள்ளடக்கும்.

(ஆ) என்னுடைய கணக்கு(கள்) /வசதி தொடர்பில் வங்கியின் ஏதேனும் உரிமைகள் அல்லது கடப்பாடுகள் தொடர்பில் எவரேனும் உண்மை அல்லது பொருத்தமான சாட்டுநர், பங்கேற்பாளர் அல்லது ஒப்பந்த தரப்பினர்.

(x) (அ) வங்கியின் அல்லது உற்பத்திகள் /சேவைகளின் அனைத்து சந்தைப்படுத்தல் தகவல்களையும் நியமிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரி, குறுஞ்செய்தி, தொலைநகல், அஞ்சல், தொலைபேசி இன்னபிற வழியாக வழங்க வங்கிக்கு அதிகாரமளிக்கின்றேன்.

(ஆ) வங்கியானது அதனது முழுமையான தற்றுணிபினில் ஏதேனும் மூன்றாம் திறத்தவருக்கு ஏதேனும் செயற்பாடுகளை சாட்டுறுத்தலாம் மற்றும் அத்தகைய மூன்றாம் திறத்தவருக்கு கணக்கின்(குகளின்) விபரங்களை வழங்கலாம். இது தொடர்பில், வங்கியின் ஏதேனும் துணைநிறுவனங்களுக்கும் மற்றும் இணைநிறுவனங்கள் அல்லது வங்கியினால் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஏதேனும் நிறுவனம் அல்லது முகவரகம் அல்லது மூன்றாம் திறத்தவருக்கு கணக்குடைமையாளர், கணக்கு(கள்) மற்றும் /அல்லது பரிமாற்றம்(கள்) குறித்த தகவல்களை செயற்படுத்த, பகிர மற்றும் களஞ்சியப்படுத்த அல்லது பரிமாறுவதற்கு வங்கி தேவைப்படுத்துகின்றது என்பதுடன் வங்கிக்கு அதிகாரமளிக்கவும் வேண்டும் என்பதனை கணக்குடைமையாளர் புரிந்துக்கொள்கின்றார்.

(xi) (அ) என்னுடைய கடைசியாக பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு எழுத்துமூல அறிவிப்பை பதினான்கு (14) வேலை நாட்களில் வழங்கியதன் பின்னர், எந்தவொரு காரணத்தையும் சாட்டாது ஏதேனும் கணக்கை திறக்க அல்லது ஏதேனும் கணக்கை மூட மறுப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

(ஆ) வங்கியானது, எவ்வாறாயினும், அதனது சொந்த வழக்குப்படிமுறையினாலோ அல்லது ஏதேனும் நீதிமன்ற அல்லது நிருவாக கட்டளை வழக்கின்பிரகாமோ, அல்லது ஏனைய வகையிலோ, எனக்கான முற்கூட்டிய அறிவித்தலுக்கோ அல்லது அது எனக்கு கடப்பாடுற்றிருக்கும் ஏதேனும் கடமையின் ஏதேனும் முறிவுக்கோ பொறுப்பாகவிராது, ஏதேனுமொரு கணக்கின்(களின்) மீதான கொடுக்கல்வாங்கல்களை மூடலாம், நிறுத்திவைக்கலாம் அல்லது இடைநிறுத்தலாம்.

(இ) வங்கியானது இருபத்து நான்கு (24) மாத காலப்பகுதிக்கு செயற்பாட்டிலில்லாத மற்றும் /அல்லது குறைந்தபட்ச நிலுவை (வங்கியினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறு) பேணாத கணக்கினை(களை) மூடுவதற்கான, அத்தகைய மூடல் குறித்து என்னுடைய கடைசியாக பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு எழுத்துமூலம் அறிவித்த பதினான்கு (14) வேலைநாட்களின் பின்னர், உரிமையை கொண்டுள்ளது.

(ஈ) அனைத்து கணக்கும்(களும்) வங்கியின் தற்றுணிபில் காலத்திற்கு காலம் மாறுவதற்கு உட்பட்ட சொந்த குறைந்தபட்ச நிலுவைத் தேவையை கொண்டுள்ளன. அத்தகைய குறைந்தபட்ச நிலுவையானது என்னால் பூர்த்திசெய்யப்படாவிடின், சேவைக்கட்டணம் மற்றும்/அல்லது அத்தகைய கணக்குகள் மீது செல்லுபடியாகக்கூடிய ஏனைய கட்டணங்களை வங்கி விதிக்கலாம். தற்போதிருக்கும் கட்டணங்களின் தீர்வையானது பிரயோகிக்கப்படும்.

(உ) மேலுள்ள ஏதேனும் கணக்கினை(களை) வங்கிக்கான முற்கூட்டிய எழுத்துமூல அறிவித்தலை (டிஜிட்டல் வடிவம் அல்லது ஏனையவகையில் எழுதப்பட்டது) வழங்குவதனால், ஏதேனும் கணக்கினை மூடுவதற்காக செல்லுபடியாகும் ஏதேனும் வங்கி கட்டணத்திற்கு உட்பட்டு, மூடலாம் என்பதனை நான் புரிந்துக்கொண்டுள்ளேன்.

(ஒை) ஏதேனும் கணக்குகள் தொடர்பிலான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில், என்னுடைய மரணம், திறனின்மை அல்லது வங்குரோத்திலிருந்து (அல்லது ஏதேனும் ஏனைய தொடர் நிகழ்வுகள் அல்லது நடவடிக்கைமுறைகள்) விளைவாகும் ஏதேனும் இழப்பிற்கு வங்கி தேவைப்படுத்துமாறான அத்தகைய ஆவண சான்றுகளுடனான அத்தகைய ஏதேனும் நிகழ்வுகளது எழுத்துமூல அறிவித்தலை (டிஜிட்டல் வடிவம் அல்லது ஏனையவகையில் எழுதப்பட்டது) வங்கி பெறாவிடினும் மற்றும் பெறும் வரையிலும் வங்கி பொறுப்புடையதாகாது. மேலும் ஏதேனும் அரசாங்கம் அல்லது அரசாங்க முகவரகம் அல்லது அதிகார சபையின் செயலுடன் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பண்புறுத்தப்படக்கூடிய அல்லது ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்திற்கு இணங்க ஏதேனும் செயல் அல்லது விடுபடுகையை வங்கி புரிந்துள்ள சந்தர்ப்பத்தில், அல்லது வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாலான ஏனைய நிகழ்வுகளினாலான (போராட்டம், துறைசார் செயற்பாடுகள், கருவியின் தோல்வி அல்லது மின் விநியோகத்தின் இடையீடு என்பவற்றை உள்ளடக்குவதும் அவற்றிற்கு மட்டுப்படுததப்படாததும்) ஏதேனும் இழப்பு, சேதம் அல்லது தாமதத்திற்கு வங்கி பொறுப்புடையதாகாது. வங்கியானது அதனது கிளைகளில் அல்லது ஏனைய வகைகளில் சொல்லப்பட்ட ஏதேனும் நிகழ்வுகளின் காரணமான எதிர்வுகூறத்தக்க தாமதத்தினை அதனது வாடிக்கையாளர்களுக்கு பொதுவில் அறிவிக்க முயற்சிக்கலாம்.

(xiii) பராயமடையாதவருக்காக நான் ஒரு கணக்கினை திறக்கின்ற சந்தர்ப்பத்தில், இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக அத்தகைய கணக்குகளுக்கு செல்லுபடியாகக்கூடிய நியதிகள் மற்றும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ள நான் உடன்படுகின்றேன்.

(ஔை) என்னுடைய மறைவின் மீது, ஏதேனும் சோந்தை, கட்டணம், மன்றாடல், எதிரீடு, எதிர்கோரல் அல்லது ஏனையவாறு எவையாவினும் அல்லது ஏதேனும் நபரினாலான ஏதேனும் கோரலை பரிசீலிக்க அது விரும்புகின்றது என வங்கி கருதும் ஏதேனும நடவடிக்கைக்கு அப்பால் எழும் உயிருடன் இருப்பவர்(கள்) மற்றும்/அல்லது செலுத்தவேண்டிய ஏதேனும் கடன் நிலுவைகளானவை அத்தகைய நிலுவை, பிணையங்கள் முதலானவை தொடர்பில் வங்கி கொண்டிருக்கக்கூடியதான ஏதேனும் உரிமையை பயன்படுத்துவதற்கு மாத்திரம் உட்பட்டு வங்கியினால் விடுவிக்கப்படும் என்பதனை நான் இத்தால் உடன்பட்டு அறிந்துக்கொண்டுள்ளேன்.

3. தொலைநகல் /மின்னஞ்சல் மூலமான வங்கிச்சேவை அறிவுறுத்தல்கள்.

(i) மாறாக நான் உமக்கு எழுத்துமூலமாக அறிவிக்காதவிடத்து (புள்ளி 4 இன் ஏற்பாடுகள் என்னவாகவிருந்தபோதிலும்) தொலைநகல் இயந்திரம் அல்லது நியமிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரி ஊடாக

பரிமாறப்பட்ட என்னுடைய வங்கிச்சேவை அறிவுறுத்தல்களின் (அவை வெளிப்படையான முரணாக குறிப்பிட்டாலன்றி இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில், என்னால் கோரப்பட்ட அல்ல வழங்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்தல்கள் உள்ளடங்கலாக) மீது செயற்படுவதற்கு வங்கி அதிகாரமளிக்கப்பட்டுள்ளதாயினும் கடப்பாடுடையது அல்ல. வங்கிக்கு என்னால் வழங்கப்பட்ட செயற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்க என்னுடைய அறிவுறுத்தல்களின் ஸ்கேன்செய்யப்பட்ட கையெழுத்திட்ட பிரதியொன்றினை அத்தகைய மின்னஞ்சல்கள் கொண்டிருத்தல்வேண்டும். இந்நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரியானது கணக்குடைமையாளரினால்/களினால் வங்கிக்கு வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரியாக காணப்படுதல்வேண்டும். இது கணக்குடைமையாளரினால்/களினால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணிகளுக்கு செல்லுபடியாகாது.

(ii) பின்வருவனவற்றுடன் தொடர்புடையதாக எவ்வாறாயினும் எழும் அனைத்து வழக்குகள், வழக்காடல்கள், வழக்குநடவடிக்கைகள், செலவீனங்கள், கோரல்கள், கேள்விகள், கட்டணங்கள், செலவுகள், இழப்புகள் மற்றும் பொறுப்புக்களிலிருந்தும் அதற்கு எதிராகவும் வங்கியை நான் விடுவிப்பதுடன் மற்றும் ஈட்டுறுதிப்படுத்துவதுடன் தீங்கற்றும் வைத்திருப்பேன்:

(அ) மேலுள்ளவாறான அத்தகைய அறிவுறுத்தல்(கள்) தவறுதலாக ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் அல்லது பரிமாறப்பட்டிருக்கலாம் அல்லது தொடர்பாடல் அல்லது பரிமாறல் வரிசைகளில் மோசடியாக திருத்தப்பட்டு, தவறாகபுரிந்துக்கொள்ளப்பட்டு அல்லது திரிபுபடுத்தப்பட்டிருக்கலாம் என்பது எவ்வாறாயினும், என்னுடைய எழுதப்பட்ட தொலைநகல் அறிவுறுத்தல்(கள்), அல்லது சொல்லப்பட்ட நியமிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரி ஊடாக அனுப்பப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க நன்னம்பிக்கையில் வங்கி செயற்பட்டிருத்தல்.

(ஆ) வங்கியானது உண்மையான பரிமாற்றத்தின் தோல்வீன் காரணத்தினால் அல்லது அனுப்பும் அல்லது பெறும் இயந்திரத்தின் தவறு, தோல்வி அல்லது தயாரின்மையுடன் தொடர்புடையதாயினும் அல்லவாயினும் ஏதாயினும் காரணத்திற்காக வங்கியின் பெறப்படுவதிலான தோல்வியினால் என்னுடைய எழுத்துமூல, தொலைபேசி, தொலைநகல் அல்லது மின்னஞ்சல் அறிவுறுத்தலுக்கு(களுக்கு) இணங்க செயற்படுவதிலிருந்து வங்கி பின்வாங்கியிருத்தல்

(இ) வங்கி குறித்துரைத்திருக்கக்கூடிய அத்தகைய காலப்பகுதிக்குள் வங்கிக்கு தொலைநகல் அறிவுறுத்தலின்(களின்) மூலப்பிரதியை அனுப்புவதிலான என்னுடைய தோல்வி.

(iii) வங்கியானது அறிவுறுத்தல் வழங்கும் அல்லது வழங்குவதாக கருதப்படும் நபரின் அதிகாரம் அல்லது அடையாளம் மற்றும் (நிலவுகின்ற சூழ்நிலைகள் எவ்வாறாயினும்) அறிவுறுத்தல்களின் பெறுகை நேரம் அல்லது அதிகாரத்துவத்தை அல்லது ஏனையவகையில் வங்கிக்கு தொலைநகல் அல்லது மின்னஞ்சல் ஊடாக வழங்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்தல்கள் அல்லது கட்டளைகளை உறுதிப்படுத்துவதற்கு எவ்வாறாயினும் விசாரிப்பதற்கான பொறுப்பின்கீழ் காணப்படமாட்டாது. வங்கியின் தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் பெறுகை நேரம் மற்றும் திகதியின் மீதான ஆளுகையை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(iv) என்னுடைய மாதிரி கையெழுத்து அல்லது வங்கியில் சேமிக்கப்பட்டுள்ள என்னுடைய சட்டத்தரணியின் மாதிரி கையெழுத்துடன் இணங்குகின்றதாக வங்கிக்கு தோன்றும் கையெழுத்தினை தாங்கியுள்ள ஏதேனும் தொலைநகல் அறிவுறுத்தல் அல்லது கட்டளையானது என்னுடைய அறிவுறுத்தல் அல்லது கட்டளைக்கு வங்கிக்கான நலனாக தக்கவாறு கருதப்படல்வேண்டும்.

(v) என்னால் வழங்கப்படாத அல்லது என்னால் அதிகாரமளிக்கப்படாத ஆனால் வங்கி நன்னம்பிக்கையில் என்னுடைய அறிவுத்தல்கள் அல்லது கட்டளைகள் அல்லது என்னால் அதிகாரமளிக்கப்பட்டதாக நம்பிய தொலைநகல் அல்லது மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள் அல்லது கட்டளைகளின் மீது வங்கி செயற்பட்டமையினால் நான் வருந்தும் ஏதேனும் இழப்புக்கு வங்கி பொறுப்புடையதாகமாட்டாது. எவ்வாறாயினும் வங்கியானது தன்னுடைய தற்றுணிபில் ஏதேனும் தொலைநகல் அறிவுறுத்தல்கள் அல்லது மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள் அல்லது கட்டளைகளின் மீது செயற்பட மறுக்கலாம்.

(vi) தொலைநகல் அல்லது மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள் அல்லது கட்டளைகளை ஏற்றுக்கொள்வதற்கான வங்கியின் அதிகாரமானது தொடரும் அதிகாரமாவதுடன் அத்தகைய அதிகாரத்தினை நீக்கிய எனது எழுத்துமூல அறிவிப்பானது வங்கியினால் பெறப்படும் வரையில் வலுவிலிருக்கும்.

(vii) தொலைநகல் பரிமாறல்கள் அல்லது மின்னஞ்சல்களானவை அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகளை வழங்கும் பாதுகாப்பான வழிகள் அல்ல என்பதனை நான் அறிந்துள்ளேன் மற்றும் அதனில் உள்ளடங்கியுள்ள இடர்களையும் நான் அறிந்துள்ளேன் என்பதுடன் அத்தகைய தொலைநகல் அல்லது

மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகளை ஏற்று செயற்பட வங்கிக்கான எனது கோரிக்கையானது என்னுடைய சௌகரியத்துக்கானது என்பதுடன் முற்றாக என்னுடைய இடரினாலானது என்பதனையும் புரிந்துக்கொண்டுள்ளேன்.

4. தொலைபேசி/மின்னஞ்சல்.தொலைநகர் ஊடாக நிலுவை/கணக்கு தகவல்களை வழங்குவதற்காக ஈட்டுறுதிப்படுத்தல்

(i) என்னுடைய கணக்கு(கள்) தொடர்பான நிலுவை மற்றும்/அல்லது ஏனைய தகவல்களை எனக்கு அல்லது என்னுடைய பிரதிநிதிகளுக்கு அது வங்கி நேரத்தில் தொலைபேசி வாயிலாக, மின்னஞ்சல் (ஸ்கேன்செய்யப்பட்ட கையெழுத்திடப்பட்ட அறிவுறுத்தல்கள்) அல்லது தொலைநகல் ஊடாக வங்கியிடமிருந்து கோரப்படும்போது வழங்குமாறு வங்கியை கோருகின்றேன். தொலைபேசி வாயிலாக, மின்னஞ்சல் அல்லது தொலைநகல் ஊடாக தகவல்களை பெறுவதில் உள்ளடங்கியுள்ள இடர்கள் குறித்து நான் அறிந்துள்ளதுடன் வங்கியானது அதனது முழுமையான தற்றுணிபினில் எனக்கு/என்னுடைய பிரதிநிதிகளுக்கு அத்தகைய தகவல்களை வழங்கும் என்பதனை நான் புரிந்துக்கொண்டுள்ளேன்.

(ii) மேலுள்ளன தொடர்பிலான வங்கியின் செயலானது முழுமையாக என்னுடைய நன்மைக்கானதும் மற்றும் என்னுடைய இடர் மற்றும் பொர்றுப்பினாலானதும் என்பதனை நான் இத்தால் உடன்பட்டு வெளிப்படுத்துகின்றேன். வங்கி மற்றும்/அல்லது அதன் பணியாளர்கள் சொல்லப்பட்ட அறிவுறுத்தல்களானவை என்னால் வழங்கப்படாத அல்லது என்னால் அதிகாரமளிக்கப்படாததாயினும் ஆனால் வங்கி நன்னம்பிக்கையில் என்னுடைய அல்லது என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அறிவுத்தல்கள் அல்லது கட்டளைகளாக நம்பிய உண்மை எவ்வாறாயினும், தொலைபேசி வாயிலாக, மின்னஞ்சல் அல்லது தொலைநகல் ஊடாக எனக்கான நிலுவை/கணக்கு தகவல்களின் முரணில் அல்லது திரிபில் அல்லது ஏனையவகையில், போலச்செய்தலுடன் தொடர்புடையதாக எழுகின்றதாயினும்சரி, ஏதாயினும் இழப்பு, சேதம் எவற்றுக்கும் பொறுப்பாக்கப்படமாட்டார்கள்.

(iii) மேற்கூறப்பட்டவாறாக வசதி/சேவையினை தொடர்ந்து வழங்கிய/வழங்கப்படுவதாக கருதப்பட்ட அறிவுறுத்தலை(களை) மதித்து முன்னெடுத்தமையை கருத்திற்கொண்டு, நான் அனைத்து அறிவித்தல்கள், கேள்விகள், கோரல்கள், வழக்குகள் அல்லது வழக்காடல்கள், ஏதேனும் காணப்பட்டாலும், மற்றும் மேற்கூறப்பட்டவாறாக வசதி/சேவையினை தொடர்ந்து வழங்கிய/வழங்கப்படுவதாக கருதப்பட்ட அறிவுறுத்தலை(களை) மதித்து முன்னெடுத்த காரணத்தின் விடயத்திற்கேற்ப, வங்கியின் மீது/எதிராக அல்லது வங்கியினால் வருந்தப்பெற்ற/உறப்பட்ட அனைத்து சேதங்கள், இழப்புக்கள், செலவீனங்கள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் எவையேனும் காணப்பட்டால் அவற்றிலிருந்தும் வங்கியை ஈட்டுறுதிப்படுத்தி பாதுகாத்தல் வேண்டும்.

5. அஞ்சல் சேவையை நிறுத்திவைத்தல்

(i) இச்சேவைக்காக நான் கோரியது எவ்வாறாயினும், வங்கியானது அதனது தற்றுணிபினில் அதிகூடியதாக இரண்டு (02) மாதக் காலப்பகுதிக்கு எனக்கு முகவரியிடப்பட்ட அஞ்சல்களை பெறப்படுவதிலிருந்து நிறுத்திவைக்கலாம் என்பதுடன் அத்தகைய அஞ்சல்கள் என்னால் பெறப்பட்டவையாகவும் கருத்தப்படவேண்டும். எழுத்துமூலமாக முரணாக நான் வங்கியை அறிவுறுத்தினாலன்றி, அவ்வாறு நிறுத்திவைக்கப்பட்ட அனைத்து அஞ்சல்களையம் நான் தனிப்பட்ட ரீதியில் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஊடாக சேகரித்துக்கொள்வேன். வங்கியானது இச்சேவைக்காகவும் வங்கி தக்கதென கருதும் அத்தகைய முறையில் அத்தகைய அனைத்து அஞ்சல்களையும் நிறுத்திவைப்பதற்கு, திறப்பதற்கு மற்றும் /அல்லது கையாளுவதற்காக நியாயமான கட்டணத்தை அறவிட அதிகாரமளிக்கப்படுகின்றது. அத்தகைய ஏதேனும் அஞ்சலை இரண்டு (02) மாதக்காலப்பகுதிக்குள் சேகரிக்க நான் தவறினால், என்னுடைய இடரிலும் செலவிலும் வங்கியுடன் கடைசியாக பதிவுசெய்யப்பட்ட முகவரியில் எனக்கு மீளவனுப்பலாம் என்பதுடன் அவ்வாறு செய்வதில் வங்கியானது அனைத்து பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புடைமையிலிருந்து விடுவிக்கப்படுதல்வேண்டும்.

(ii) எதுஎவ்வாறாயினும், ஏதேனும் அஞ்சலை நான் சேகரிக்கும் வரையில், அவ்வஞ்சல்களின் உள்ளடக்கம் குறித்து அறிந்திருக்கமாட்டடேன் என்பதுடன் அது சட்ட பின்விளைவுகளை கொண்டிருக்கும் அல்லது வங்கியுடனான எனது உரிமைகளை பாதிக்ககூடும் என்பதுடன் அத்தகைய பின்விளைவுகளின் இடரினை நான் ஏற்கவேண்டியவனாவேன்.

(iii) வங்கியில் காணப்படும் ஏதேனும் அஞ்சலின் உள்ளடக்கம் மீதான என்னுடைய அறியாமையானது வங்கியுடனான என்னுடைய கணக்கின்(களின்) முடிவுறுத்துகைக்கு முன்னதாக அல்லது பின்னராயினும்சரி அனைத்து நோக்கங்களுக்குமான வங்கியின் கோரல்களுக்கு எதிரானதாக மற்றும் அனைத்து சட்டப்பூர்வ நீதிமன்றங்களிலும் எதிரானதாக காணப்படவில்லை மற்றும் காணப்படமாட்டாது.

6. எதிரீடு மற்றும் ஒழித்துக்கட்டல் உரிமைகள்

வங்கியானது எந்நேரத்திலும் மற்றும் காலத்திற்கு காலமும் அறிவித்தலின்றி எனது அனைத்து அல்லது ஏதேனும் கணக்கு(கள்) மற்றும் வங்கியுடனான பொறுப்புக்களை, தனித்தாயினுஞ்சரி அல்லது எவரேனும் ஏனைய நபருடன் கூட்டாகவாயினுஞ்சரி ஒருங்கிணைக்கலாம், அல்லது மூலமாயினும் அல்லது ஈடாயினும், உண்மையானதாயினும் அல்லது அடுத்துறுவதாயினும், மூலதனமாயினும் அல்லது துணைஈடாயினும், அல்லது தனியானதாயினும் அல்லது எவரேனும் ஏனைய நபருடன் கூட்டானதாயினுஞ்சரி வங்கிக்கான என்னுடைய ஏதேனும் பொறுப்பின் திருப்தியினை நோக்கி வங்கியுடனான என்னுடைய வைப்புக்கள் (முதிர்வடைந்ததாயினும் அல்லவாயினும்சரி) உள்ளடங்கலாக ஏதேம் கணக்கின்(குகளின்) வரவில் நிற்கும் அனைத்து அல்லது ஏதேனும் பணங்களை எதிரிடலாம், மற்றும் வங்கி அப்போது நடைமுறையிலிருக்கும் வங்கியின் சொந்த பரிவர்த்தனை வீதத்தில் ஏதேனும் அத்தியாவசிய நாணய மாற்றுகளை பாதிக்கலாம். வங்கியின் உரிமையானது என்னுடைய மரணத்தினாலோ வங்குரோத்தினாலோ பாதிக்கப்படுதலாகாது.

7. ஈட்டுறுதி

வங்கிச்சேவை வசதிகளை வழங்குவதுடன் தொடர்புடையதாக: அல்லது ஏதேனும் கணக்குடன்(களுடன்) தொடர்புடையதாக, அல்லது பொதுவில் இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில்: அல்லது இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளை அமுலாக்குவதில் மற்றும் வங்கிக்கு வருமதியாகவுள்ள ஏதேனும் தொகையை மீட்பதில்; அல்லது ஏதேனும் இயல்பில் ஏதேனும் சட்ட நடைமுறைகளினால் வங்கியால் உறப்படுகின்றதான எவ்வகையிலுமாக எழுகின்ற அனைத்து செலவீனங்கள் மற்றும் செலவுகளுக்கும் (சட்ட கட்டணங்கள் உள்ளடங்கலாக) எதிராக வங்கியை முழுமையாக ஈட்டுறுதிப்படுத்த நான் உடன்படுகின்றேன்.

8. விலக்களிப்பு

குறிப்பிட்ட சம்பவம் அல்லது நிகழுகை தொடர்பில் இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் வங்கியினாலான சகிப்பு, புறக்கணிப்பு அல்லது விலக்களிப்பானது அதன்பின்னராக அவ்வொத்ததனை கடுமையாக அமுல்படுத்துவதிலான வங்கியின் உரிமைக்கு தீங்குவிளைவிப்பதாக காணப்படுதலாகாது. வங்கியின் எந்தவொரு விலக்களிப்பும் அது எழுத்தினாலானதன்றில் பயனுடையதாகாது.

9. அறிவித்தல்

இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகள் எவ்வாறாயினும் அதற்கு மட்டுப்படுத்தப்படாததுமாக இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்கீழ் வங்கியினால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கேள்வி அல்லது தொடர்பாடல் அல்லது ஏதேனும் வசதிக்கான ஏதேனும் விண்ணப்பத்தினை தொடருவதானது எழுத்தில் (டிஜி) காணப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும் அத்துடன் அதனைத் தொடர்ந்து என்னால் எழுத்தில் வேறு முகவரி அறிவிக்கப்படும் வரையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் கருதப்படுதல்வேண்டும்.

10. வெளிநாட்டு நாணய கணக்கு/பரிமாற்றங்கள்

(i) வெளிநாட்டு நாணயக் கணக்கினை (குகளை) திறத்தலானது காலத்திற்கு காலம் வெளிநாட்டு பரிவர்த்தனைத் திணைக்களம் மற்றும் /அல்லது அதுபோன்ற அதிகாரசபைகளினால் கோரப்படுகின்றவாறான குறிப்பிட்ட ஆவணங்களை கோரும் என்பதனை நான் புரிந்துக்கொண்டுள்ளேன். அவ்வாறு கோரப்பட்ட குறித்த ஆவணங்களானது வங்கியில் கணக்கினை (குகளை) திறப்பதற்கு முன்னதாக என்னால் வழங்கப்படுதல்வேண்டும்.

(ii) வெளிநாட்டு பயண அட்டை (FTC), வெளிநாட்டு நாணயத்தாள்கள், இலங்கை ரூபா கணக்குகளுக்கு மற்றம் கணக்கிலிருந்து, வெளியக பணவலுப்பல் மற்றும் உள்ளக பணவலுப்பல், எதிர்பார்க்கும் பதிவுசெய்தல் பரிமாற்றம் உள்ளடங்கலாக வெளிநாட்டு நாணய பரிமாற்றங்கள் என்பவற்றின் பிரச்சினைகளையும் மற்றும் வெளிநாட்டு நாணய கணக்குகளானவை வங்கி பொறுப்பாக காணப்பட்டிராத, காலத்திற்கு காலம் முன்னறிவித்தலின்றி மாறக்கூடிய வெளிநாட்டு பரிவர்த்தனைத் திணைக்களம்

மற்றும்/அல்லது அதுபோன்ற அதிகாரசபைகளினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளினால் ஆளப்படுகின்றன என்பதனையும் நான் புரிந்துக்கொண்டுள்ளேன்.

(iii) வெளிநாட்டு நாணயம் மற்றும்/அல்லது எதிர்பார்க்கும் முன்பதிவு பரிமாற்றங்கள் உள்ளிட்ட வெளிநாட்டு நாணய பரிமாற்றங்களில் குறிப்பிடப்படும் ஏதேனும் கணக்குடன் (கணக்குகளுடன்) இடர்கள் இணைந்திருக்கக்கூடும் என்பதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதன்பிரகாரம், அத்தகைய அனைத்து இடர்களுக்கும் மற்றும் எந்தவொரு மட்டுப்பாடுகளுமின்றி உள்ளடக்கி எழும் எவ்வாறாயினுமான ஏதேனும் செலவுகள் மற்றும் செலவீனங்கள், அத்தகைய ஏதேனும் கணக்கு (கள்) மற்றும் /அல்லது வெளிநாட்டு நாணய பரிமாற்றங்கள் தொடர்பில் ஏதேனும் சர்வதேச அல்லது உள்ளூர் சட்ட அல்லது ஒழுங்குபடுத்தல் மட்டுப்பாடுகளிலிருந்து எழுகின்ற அனைத்திற்கும் நான் முற்றான பொறுப்பாளியாவேன் என்பதனையும் அத்தகைய வங்கிக்கு அப்பாலான பரிமாற்றங்களில் எழும் ஏதேனும் இழப்பு அல்லது சேதத்திற்கு எதிராக வங்கியை ஈட்டுறுதிப்படுத்துவேன் என்றும் ஏற்றுக்கொள்கின்றேன். அத்தகைய கணக்குகள் மீதான பணமீளப்பெறல்கள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் என்பனவும் வங்கியின் தொடர்புடைய கிளையில் கிடைக்கப்பெறும் தொடர்புடைய நாணயத்திற்கு உட்பட்டனவாகும். ஒரு நாணயத்திலிருந்து மற்றொரு நாணயத்திற்கான மாற்றலானது வங்கியினால் (அதனது முழுமையான தற்றுணிபினில்) காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்ற பரிவர்த்தனை வீதத்தில் காணப்படுதல் வேண்டும்.

11. பெயரிடல்

பெயரிடலுக்கான நியதிகள் மற்றும் நிபந்தனைகளானவை தனியான ஆவணமொன்றான பெயரிடல் படிவத்தில் குறித்துரைக்கப்பட்டனவாக காணப்படும்.

12. ஐக்கிய அமெரிக்காவின் வெளிநாட்டு கணக்கு வரி இணக்க சட்டம் (FATCA)

வங்கியானது எனக்கான அறிவித்தலுடனோ அன்றியோ என்னால் திறக்கபட்ட/பேணப்பட்ட/மேற்கொள்ளப்பட்ட கணக்குகளுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களையும் ஐக்கிய அமெரிக்க நாடுகளது உள்நாட்டு இறைவரி சேவைக்கு அல்லது ஐக்கிய அமெரிக்க நாடுகளது ஏதேனும் ஏனைய ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு அல்லது அத்தகைய தகவல்களை வெளிப்படுத்துவதற்கான தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்காக வங்கியின்மீது கடமை/கடப்பாடு விதிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஏனைய நியாயாதிக்கத்திற்கு அறிக்கையிட இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

இவ்வொப்புதலானது இலங்கையின் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க (திருத்தப்பட்டவாறாக) வங்கிச்சேவை சட்டத்தின் 77 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது. என்னிடமிருந்தான மேலதிக ஒப்புதலின்றி FATCA அல்லது ஏதேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் விதிக்கப்பட்ட மற்றும்/அல்லது ஏனைய நியாயாதிக்கங்களினால் விதிக்கப்படக்கூடிய, உள்நாட்டு இறைவரிச் சேவை அல்லது ஏதேனும் ஏனைய ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு செலுத்தப்படவேண்டிய ஏதேனும் வரிகள் மற்றும்/அல்லது தீர்வைகளை,தேவைப்பட்டால் என்னுடைய கணக்குகளிலிருந்து வரவுவைத்து பணவனுப்ப வங்கிக்கு மேலும் அதிகாரமளிக்கப்படுகின்றது. என்னுடைய வதிவிடம்/குடியுரிமை நிலைகளிலான ஏதேனும் எதிர்கால மாற்றங்களை வங்கிக்கு அறிவிக்க நான் இத்தால் பொறுப்பேற்கின்றேன்.

13. முறைப்பாடு கையாளல்

கணக்குடைமையாளர் வங்கிக்கு ஏதேனும் முறைப்பாட்டினை வாய்மொழியாக அல்லது எழுத்துமூலமாக அருகிலுள்ள கிளை அல்லது வங்கியின் அழைப்பு மையம் அல்லது தலைமை காரியாலயத்தில் வங்கியின் உத்தியோகப்பூர்வ வலைத்தளம் அல்லது ஏதேனும் உத்தியோகப்பூர்வ பதிப்பு அல்லது வங்கியின் அறிவித்தலில் பதிப்பிக்கப்பட்டவாறாக அதனில் வழங்கப்பட்டுள்ள நடைமுறைகளின் பிரகாரம் மேற்கொள்ள உரிமையுடையவராதல் வேண்டும். முறைப்பாடுகள் தீர்க்கப்படாத சந்தர்ப்பத்தில் நிதி குறைகேள் அதிகாரி மூலம் உதவிகளைப் பெற கணக்குடைமையாளர் முயற்சிக்கலாம்.

14. சாட்டுறுத்தல்

வங்கியானது அதனது ஏதேனும் அல்லது அனைத்து உரிமைகளையும் இதனகத்துக்கீழ் ஏனைய மூன்றாம் திறத்தவருக்கு அதன்பொருட்டான கணக்குடைமையாளரின் முற்கூட்டிய அனுமதியைப் பெறாமல் சாட்டுறுத்துவதற்கான உரிமையை கொண்டிருக்கின்றது.

15. இ-கூற்றுக்கள்

(i) இ-கூற்றினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக சரியான மின்னஞ்சல் முகவரியை வங்கிக்கு சமர்ப்பிக்க நான் முற்றான பொறுப்பாளியாவேன் என்பதுடன் இ-கூற்றுக்களை நான் அணுகும் என்னுடைய சாதனங்களில் அடோப் எக்ரோபட் பதிப்பு 6 அல்லது அதற்கு பிறகு வெளியிடப்பட்ட பதிப்புக்கள் நிறுவப்பட்டிருக்கும் என்பதனை உறுதிப்படுத்தவும் அத்துடன் இ-கூற்றக்களை தடையின்றி பெறுவதனை உறுதிப்படுத்துவதற்காக அஞ்சல்பெட்டியானது கிரமமாக அழிக்கப்பட்டிருக்கும் என்பதற்கும் நான் இத்தால் உடன்படுகின்றேன்.

(ii) மாற்றமொன்று முன்னெடுக்கப்படுகின்றபோது புதிய மின்னஞ்சல் முகவரியை வங்கிக்கு வழங்க பொறுப்பேற்கின்றேன்.

16. குறுஞ்செய்தி சேவை

(i) சேவைக்காக பதிவுசெய்த (வாடிக்கையாளர்கள்) அதனது வாடிக்கையாளர்களுக்காக வங்கியினால் /NDB இனால் கிடைப்பனவாக்கப்பட்டுள்ள குறுஞ்செய்தி சேவையின் (சேவை) பயன்பாடானது எல்லா நேரங்களிலும் வங்கியின் குறிப்பிட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளினால் ஆளப்படுதல்வேண்டும். வாடிக்கையாளர் சேவையை அணுகுவதற்காக வங்கியில் பதிவுசெய்த இலக்கத்தையுடைய தன்னுடைய தொலைபேசியை மாத்திரமே பயன்படுத்துதல்வேண்டும். வாடிக்கையாளர் தன்னுடைய சிம் அட்டை மற்றும் செல்லிடப்பேசியை தன்னுடைய இருப்பில் எப்போதும் கொண்டிருத்தல்வேண்டும். வங்கியின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் வாடிக்கையாளர் இணங்குவதில் தவறியதன் பின்விளைவுகளுக்கு வாடிக்கையாளரே முற்றான பொறுப்பாளியாதல்வேண்டும். வழங்கப்பட்ட தொலைபேசி இலக்கங்களிலான ஏதேனும் மாற்றம் வங்கிக்கு அறிவிக்கப்படுவதற்கு வாடிக்கையாளர் பொறுப்பாதல்வேண்டும்.

(ii) வாடிக்கையாளர்களுக்கு குறுஞ்செய்தி சேவை ஊடாக அளிக்கப்படும் சேவைகள் குறித்து தீர்மானிக்கும் உரிமையை வங்கி கொண்டிருக்கின்றது.

(iii) குறுஞ்செய்தி சேவைகளானது வங்கியின் தற்றுணிபில் மாற்றப்படக்கூடிய ஒவ்வொரு உற்பத்திக்குமாக வங்கியினால் வரையறுக்கப்படும் குறைந்தபட்ச பரிமாற்ற நிலைஅளவையின் அடிப்படையில் வாடிக்கையாளருக்கு அனுப்பிவைக்கப்படும்.

(iv) சேவையானது NDB அழைப்பு மையத்திற்கு அழைப்பதன் மூலமாக வங்கிக்கான வாடிக்கையாளரின் கோரிக்கையின்மீது எந்நேரத்திலும் நிறுத்தப்படும். அத்தகைய ஏதேனுமான நிறுத்தல்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும்.

(v) வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறான இடைவெளியில் வங்கியுடனான வாடிக்கையாளரின் ஆரம்ப தனிப்பட்ட கணக்கிலிருந்து வங்கிச்சேவை கணக்கு பரிமாறல்களுக்கான குறுஞ்செய்தி சேவை சந்தா கட்டணம் பற்றுவைக்கப்படும்.

17. NDB இன் கடனட்டைகளை ஆளும் நியதிகளும் நிபந்தனைகளும்

(i) பகுதி 18 இல் பயன்படுத்தப்பட்ட நியதிகளானவை வேறுவகையில் குறிப்பிடப்பட்டாலன்றி நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் அதே பொருளைக் கொண்டிருக்கும்.

(அ) "ATM" என்பது உலகளவில் NDB கடனட்டைகளை ஏற்றுக்கொள்ளும் அனைத்து தன்னியக்க கூற்று இயந்திரம் எனப்பொருள்படும்.

(ஆ) "அட்டை உடைமையாளர்" என்பது கணக்கினை அதன்நிமித்தமான சாசனத்திற்கு இணங்கி செயற்படுத்துவதற்கு அதிகாரத்தினை கொண்டுள்ள நபர் அல்லது நபர்கள் எனப்பொருள்கொள்ளப்படுதல்வேண்டும்.

(இ) "அட்டை வசதி" என்பது ATM பரிமாற்றம் மற்றும் அனைத்து தொடர்புடைய விடயங்கள் எனப்பொருள்கொள்ளப்படுதல்வேண்டும்.

(ஈ) "அட்டை பரிமாற்றங்கள்" எனப்படுவது ATM மற்றும் POS முனையங்களின் ஊடாக செயற்படுத்தப்படுவதற்கான திறனுடைய அனைத்து பரிமாற்றங்கள் எனப்பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(உ) “NDB கடனட்டை” என்பது விசா அட்டை அல்லது ஏதேனும் புதுப்பிக்கத்தக்க அல்லது மீளிடமாற்றத்தக்க அட்டைகள் உள்ளடங்கலாக ATM மற்றும் POS கள் ஊடாக வியாபார பரிமாற்றத்திற்காக அட்டை உடைமையாளருக்கு வங்கியினால் ஏனைய வர்த்தக நாமத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் ஏனைய அட்டை எனப்பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஊ) “PIN” என்பது NDB கடனட்டையை வழங்கும்போது வங்கியினால் அட்டை உடைமையாளருக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட அடையாளப்படுத்தல் இலக்கம் அல்லது NDB கடனட்டை பரிமாற்றங்கள் தொடர்பில் அவரை அடையாளப்படுத்துவதற்காக வங்கியுடனான ஏற்பாட்டில் அட்டை உடைமையாளரினால் மாற்றீடுசெய்யப்பட்ட இலக்கம் எனப்பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(எ) “POS” என்பது NDB கடனட்டைகளை ஏற்றுக்கொள்ளும் உலகளவிலான வணிகர்களுக்கு கிடைப்பனவாகக்கூடிய விற்பனை முனைய புள்ளி எனப்பொருள்படும்.

(ii) அட்டை உடைமையாளர் ATM களிலிருந்து பணத்தினை மீளப்பெறுவதற்காக PIN உடன் இணைந்த NDB கடனட்டைகளை பயன்படுத்தலாம். அட்டை உடைமையாளரினால் அவ்வாறு மீளப்பெறப்பட்ட பணத்தொகையானது கணக்கில் பற்றுவைக்கப்படும்.

(iii) அட்டை உடைமையாளர் பணத்தை மீளப்பெற அல்லது அதிகாரமளிக்கப்பட்ட தாபனங்களிலிருந்து கணக்கிலிருந்து பற்றுவைக்கப்படக்கூடிய தொகைக்கு வாடிக்கையாளரினால் வவுச்சரில் கையெழுத்திடுவதனால் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்கு NDB கடனட்டைகளை ஏற்றுக்கொள்ளும் எந்தவொரு வங்கியிலும் NDB கடனட்டையை பயன்படுத்தலாம்.

(iv) அட்டை உடைமையாளருக்கு அட்டை வசதியை வழங்குதலானது வங்கியின் முழுமையான தற்றுணிபினிலும் மற்றும் அட்டை வசதி ஊடாக மேற்கொள்ளப்படும் அனைத்து அட்டை பரிமாற்றங்களுக்கும் எந்நேரத்திலும் பொறுப்பாக காணப்படவேண்டிய அட்டை உடைமையாளரின் இடரிலும் காணப்படுதல்வேண்டும். அட்டை வசதியானது ஆரம்பத்தில் அறுபது (60) மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கும் மற்றும் வங்கியின் முழுமையான தற்றுணிபினில் அத்தகைய காலப்பகுதியின் முடிவில் புதப்பிக்கத்தக்கதாகவும் வழங்கப்படலாம். எனினும், எந்நேரத்திலும் முற்கூட்டிய அறிவித்தலின்றியும் மற்றும் அட்டை உடைமையாளருக்கு எந்தவொரு காரணத்தை அளிக்காமலும் NDB கடனட்டையை மீளப்பெறுதல், இரத்துச்செய்தல் அல்லது புதுப்பிக்க மறுத்தலினால் அட்டை வசதியை முடிவுறுத்தும் சுதந்திரத்தை உடையதாக காணப்படுதல்வேண்டும்.

(v) அட்டை உடைமையாளர் தன்னுடைய தற்றுணிபினில் இவ்வட்டை வசதியை மீளவளிப்பதற்காக, அட்டை உடைமையாளர் வங்கிக்கு ஏழு (07) நாட்களுக்கு குறையாமல் எழுத்துமூலம் அறிவிக்கவேண்டும் என்பதுடன் உடனடியாக வங்கியிடம் கடனட்டையை திரும்பக்கொடுத்து அதற்கான செல்லுபடியாகும் பற்றுச்சீட்டையும் பெற்றுக்கொள்ளுதல்வேண்டும்.

(vi) NDB கடனட்டையானது எல்லா நேரத்திலும் வங்கியின் ஆதனமாக காணப்படுதல்வேண்டும் என்பதுடன் அட்டை வசதிதியை பயன்படுத்த வங்கி அதிகாரமளித்துள்ளவறான, அட்டை உடைமையாளர், அவ்வொத்ததினை போலியாக்கவோ அல்லது அத்தகைய போலியை தொடரவோ முயற்சித்தலோ கூடாது.

(vii) கணக்கு மூடப்பட்டிருந்தாலோ மற்றும்/அல்லது அட்டை உடைமையாளர் மரணித்திருந்தாலோ அல்லது NDB கடனட்டையை திரும்பவழங்குமாறு அட்டை உடைமையாளரை வங்கி தேவைப்படுத்துகின்றபோதெலாமும் NDB கடனட்டையை மீளவழைக்க/மீளப்பெற உரித்துடையதாதல்வேண்டும்.

(viii) அட்டை உடைமையாளர் NDB கடனட்டையை இரத்துச்செய்தல் அல்லது மீளப்பெறல் அறிவித்தலானது வங்கியினால் அல்லது வங்கியின் சார்பான எவரேனும் நபரினால் அவருக்கு வழங்கப்பட்டதன் பின்னர் அதனை பயன்படுத்துவதிலிருந்து அல்லது பயன்படுத்த முயற்சிப்பதிலிருந்து விலகியிருக்கவும் வங்கியுடனான கணக்கானது ஏதேனும் காரணத்துக்காக மூடப்பட்டால் NDB கடனட்டையை திரும்பவழங்கவும் பொறுப்பேற்கின்றார். PIN என்பது NDB கடனட்டையின் பயன்பாட்டு நோக்கத்திற்காக வழங்கப்படுவதுடன் அந்நோக்கத்திற்காக பிரதியிடப்படும் ஏதேனும் இலக்கமானது (இலக்கங்களானது) கடும் இரகசியத்துடன் காணப்படுதல்வேண்டும். PIN இலக்கமானது தன்னார்வலமாயினுஞ்சரி அல்லது வேறுவகைலாயினுஞ்சரி எந்தவொரு சூழ்நிலையின் கீழும் அல்லது எந்தவொரு வழியினாலும் எவரேனும்

மூன்றாம் திறத்தவருக்கு வெளிப்படுத்தப்படுதலாகாது. அட்டை உடைமையாளர் PIN இன் எழுதிய பதிவினை எந்தவொரு இடத்திலும் அல்லது NDB கடனட்டையை பயன்படுத்த மூன்றாம் திறத்தவருக்கு இயலச்செய்யும் எந்தவொரு வகையிலும் பேணுதலாகாது.

(ix) அட்டை உடைமையாளர் எந்நேரமும் NDB கடனட்டையினைப் பயன்படுத்திய எவ்வாறாயினுமான ஏதேனும் அட்டைப் பரிமாற்றங்களுக்கு பொறுப்பாக காணப்படுவார் என்பதுடன் NDB கடனட்டையின் ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத பயன்பாடு அல்லது தொடர்புடைய PIN இன் பயன்பாட்டினால் எவ்வாறாயினும் ஏற்படுத்தப்பட்ட அனைத்து இழப்புகள்/சேதங்களுக்காக வங்கியை ஈட்டுறுதிப்படுத்துபவராகவும் காணப்படுதல்வேண்டும்.

(x) இவ்வட்டை வசதியானது இது கிடைப்பனவாக்கப்பட்டுள்ள அட்டை உடைமையாளரினால் மாத்திரம் பயன்படுத்தப்படுதல்வேண்டும் என்பதுடன் NDB கடனட்டையில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளில் தன்னுடைய கையொப்பத்தினையும் இடுதல்வேண்டும். அவர் NDB கடனட்டையின் காணமல்போதல் /திருட்டு மற்றும் எவரேனும் அதிகாரமளிக்கப்படாத நபர் அவரது PIN இலக்கம் குறித்து அறிந்துக்கொள்ளலை தடுப்பதற்கும் சாத்தியமான அனைத்து கவனத்தினையும் எந்நேரத்திலும் நடைமுறைப்படுத்தவேண்டும். காணாமற்போதல் /திருட்டு அல்லது PIN இலக்கத்தின் அதிகாரமளிக்கப்படாத பயன்பாடு குறித்த அறிவித்தலானது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என அட்டை உடைமையாளருக்கு வங்கி உறுதிப்படுத்தும் காலம் வரையில், NDB கடனட்டையின் பயன்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள அட்டை பரிமாற்றத்திற்கான முழு பொறுப்பினையும் அட்டை உடைமையாளர் ஏற்றுக்கொள்ளல்வேண்டும்.

(xi) அட்டை உடைமையாளர் NDB கடனட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள அவரது கணக்கிலிருந்து மிகைமீளப்பெறலினை மேற்கொள்ளவோ அல்லது வங்கியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் மிகைமீளப்பெறல் அல்லது கணக்கில் காணப்படும் பணத்தினை விஞ்சியதாக NDB கடனட்டையின் பயன்பாட்டினால் பணமீளப்பெறவோ/பரிமாற்றவோ அல்லது ஏதேனும் ஏனைய வகையில் மாற்றுதலோ ஆகாது.

(xii) அட்டை உடைமையாளருக்கு விநியோகிக்கப்பட்ட NDB கடனட்டை மற்றும் PIN இலக்கமானது கைமாற்றப்படுவதற்கானதல்ல என்பதுடன் அவரது பிரத்தியேக பாவனைக்கானது மாத்திரமாகும். PIN இலக்கத்தினை கடும் இரகசியத்தன்மையுடன் பேணுவதற்கு அட்டை உடைமையாளர் பொறுப்புடையவராவதுடன் எந்தவொரு சூழ்நிலையிலும் எந்தவொரு நேரத்திலும் எவரேனும் நபருக்கு தன்னுடைய PIN இலக்கத்தினை வெளிப்படுத்தாதிருக்கவும் பொறுப்பேற்கின்றார்.

(xiii) வங்கியானது அட்டை உடைமையாளரின் அறிவு அல்லது அதிகாரத்துடனோ அல்லது அன்றியோ NDB கடனட்டையின் பயன்பாட்டினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் பணமீளப்பெறல்/பரிமாற்றம் /கொடுப்பனவுத் தொகையினை அட்டை உடைமையாளரின் நியமிக்கப்பட்ட கணக்கில் பற்றுவைக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் ஏதேனும் ஒரு நாளில் முன்னெடுக்கப்பட்ட பரிமாற்றங்களின் மொத்த தொகையானது காலத்திற்கு காலம் வங்கியினால் அட்டை உடைமையாளருக்கு அறிவிக்கப்பட வேண்டியவாறான அத்தகைய தொகை மற்றும் அத்தகைய ஏனைய நிபந்தனைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படுதல்வேண்டும்.

(xiv) வங்கியானது NDB கடனட்டை ஊடாக அல்லது மேலுள்ள மட்டுப்பாடுகள் எதுவாயினும் ஏதேனும் உள்ளுர் வலையமைப்பின் ஊடாக உள்நாட்டில் அல்லது சர்வதேசரீதியில் மேற்கொள்ளப்பட்ட அட்டை பரிமாற்றத்துடன் தொடர்புடைய சட்ட அல்லது ஏனைய நிலையியற் கட்டணங்கள் உள்ளடங்கலாக அனைத்து கட்டணங்களையும் அட்டை உடைமையாளரின் நியமிக்கப்பட்ட கணக்கில் பற்றுவைக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

(xv) இலங்கை ரூபாவை விட நாணயங்களில் விளைவேற்படுத்தும் அனைத்து அட்டை பரிமாற்றங்களும் வங்கியினால் தீர்வையாக்கப்படும் மேலதிக சதவீதம் மற்றும் வங்கிக்கு விசா இன்டர்நேசனலினால் கட்டணமாக்கப்படும் ஏதேனும் அட்டை பரிமாற்ற கட்டணங்கள் என்பவற்றுடன் இணைந்ததாக விசா இன்டர்நேசனலினால் நாணயமாற்று திகதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிவர்த்தனை வீதத்தினால் தீர்மானிக்கப்படும் பரிவர்த்தனை வீதத்தில் இலங்கை ரூபாவுக்கு நாணயமாற்றப்பட்டதன் பின்னர் அட்டை கணக்கில் பற்றுவைப்படுதல்வேண்டும்.

(xvi) அட்டை உடைமையாளர் ஏதேனும் பரிமாற்றத்தின் ஏதேனும் இரத்துசெய்தல், மீட்டல், அல்லது மீள்நிதியிடலிலிருந்து பெறுபேறாகக்கூடிய ஏதேனும் பரிவர்த்தனை இழப்புக்கான பொறுப்பாளியாதல்வேண்டும்.

(xvii) ATM காட்சித்திரை அல்லது ATM இனால் அச்சிடப்பட்ட விசாரணை சிட்டை அல்லது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு என்பன ஏதேனும் நோக்கம் எதுவாயினும் வங்கியுடன் நியமிக்கப்பட்ட கணக்கின் நிலைக்கான தக்க ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதனை அட்டை உடைமையாளர் அறிந்துக்கொண்டுள்ளார். NDB கடனட்டையின் பயன்பாட்டினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அட்டை பரிமாற்றத்தின் வங்கிப் பதிவானது 18(xi), 18(xii), 18(xiii) மற்றும் 18(xiv) ஆம் சரத்துக்களிற்கு உட்பட்ட அனைத்து நோக்கங்களுக்காகவும் தகுந்ததாகவும் பிணைப்பதாகவும் காணப்படுதல்வேண்டும்.

(xviii) NDB கடனட்டையினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பரிமாற்றத்தின் பதிவானது ஒவ்வொரு கூற்றையும் பரிசீலிக்க தேவைப்படுத்துகின்ற அட்டை உடைமையாளருக்கு அனுப்பிவைக்கப்படும் சாதாரண வங்கி கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதுடன் நிதிக்கூற்றுக்களின் அத்தகைய காலத்திற்கு பின்னரான அத்தகை நிதிக்கூற்று திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குள் அதனிலான ஏதேனும் சாட்டப்பெற்ற தவறினை வங்கிக்கு அறிவிக்க வேண்டும் மற்றும் அதனிலான உள்ளீடுகள் (அவ்வாறு அவதானிக்கப்பட்ட ஏதேனும் தவறுகள் நீங்களாக) அனைத்த நோக்கங்களுக்காகவும் வங்கிக்கும் அட்டை உடைமையாளருக்கும் இடையில் சரியானதாக தக்கவாறு கருதப்படுதல்வேண்டும்.

(xix) வங்கியானது பின்வருவனவற்றுக்கு எந்தவொரு பொறுப்பினையும் ஏற்பதில்லை:

(அ) NDB கடனட்டையினை மதிக்க அல்லது ஏற்றுக்கொள்ள அல்லது முழுமையான மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட எல்லைக்கு வசதிகளை விரிவுபடுத்துவதிலான ஏதேனும் வர்த்தக தாபனத்தின் மறுப்பு அல்லது தோல்வி.

(ஆ) NDB கடனட்டையின் பயன்பாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்கள் மற்றம் சேவைகளிலான ஏதேனும் குறை அல்லது குறைபாடு.

(இ) NDB கடனட்டையினைப் பயன்படுத்தி அட்டை உடைமையாளரை பொருட்களை கொள்வனவுசெய்ய அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்ள தூண்டிய அல்லது ஊக்கப்படுத்திய விளம்பரம், விளம்பரப்படுத்தல் அல்லது மேம்படுத்தல் சாதனங்களில் மேற்கொள்ளப்பட்ட அல்லது உள்ளடக்கப்பட்ட ஏதேனும் தவறான பிரதிநிதித்துவம்.

(ஈ) ஏதேனும் இடையூறு அல்லது தோல்வி அல்லது ஏதேனும் ATM அல்லது தொடர்பாடல் முறைமை அல்லது வசதிகள் அல்லது தரவு நடைமுறை முறைமை அல்லது பரிமாற்ற இணைப்பின் குறைபாட்டினால் அல்லது ஏதேனும் அல்லது கைத்தொழிற்றுறை அல்லது பிணக்குகளினால் அல்லது வங்கியின் கட்டுப்பாடு அல்லது மற்றையவற்றுக்கு அப்பாலான ஏனைய காரணிகளாலான அல்லது அவற்றிலிருந்து எழும் எவ்வகையானதுமான அசௌகரியம், இழப்பு, சேதம் அல்லது அவமானம்.

(xx) NDB கடனட்டையினைப் பயன்படுத்துகின்ற அனைத்து அட்டை பரிமாற்றங்களும் :

(அ) அட்டை பரிமாற்ற நேரத்தில் நிலவும் வெளிநாட்டு பரிவர்த்தனை ஒழுங்குவிதிகளுக்கு (உள்ளூர் மற்றும் வெளிநாடு மற்றும் உலகம் முழுவதிலுமாக அட்டை உடைமையாளரின் தனிப்பட்ட செலவுகளுக்காக NDB கடனட்டையின் பயன்பாட்டினை உள்ளடக்கியதும் ஆனால் அதற்கு மட்டுப்படுத்தப்படாததும்) இணங்கியதாகும்: மற்றும்

(ஆ) சட்ட நோக்கத்திற்காக, மூன்றாம் திறத்தவர் சார்பான வெளியக கொடுப்பனவுகளானவை வெளிநாட்டு பரிவர்த்தனை ஒழுங்குபடுத்தலை மீறுவதாகும் என்பது குறிப்பிற்கொள்ளபடவேண்டும்.

என்பதனை அட்டை உடைமையாளர் எல்லா நேரங்களிலும் உறுதிப்படுத்தல்வேண்டும்.

(xxi) வங்கி பொருத்தமானதெனக் கருதும் ஏதேனும் முறையில் காலத்திற்கு காலம் நியதிகள் மற்றும் நிபந்ததனைகளை திருத்த, வேறுபடுத்த, மாற்ற, மீளப்பெற, புதுப்பிக்க, அல்லது இரத்துசெய்வதற்கான உரிமையினைக் கொண்டுள்ளது. அட்டை உடைமையாளருக்கான அறிவுறுத்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய திருத்தங்கள் வினைப்பயனுறும் திகதிக்கு பின்னர் NDB கடனட்டையினை பயன்படுத்துவதன் மீதான அத்தகைய திருத்தங்களிற்கு எந்தவொரு ஒதுக்குகளுமின்றி ஏற்றுக்கொண்டதாக அட்டை உடைமையாளர் கருதப்படுவார். அட்டை உடைமையாளர் அத்தகைய திருத்தத்தினை

ஏற்றுக்கொள்ளவில்லையெனில் னேுடீ கடனட்டையானது வங்கிக்கு திருப்பியனுப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கான செல்லுபடியாகும் பற்றுச்சீட்டும் பெற்றுக்கொள்ளப்படுதல்வேண்டும்.

(xxii) வங்கியின் ஏதேனும் அல்லது அதனது உரிமைகளை இதனதகத்துக்கீழ் ஏனைய மூன்றாம் திறத்தவருக்கு கணக்குடைமையாளரின் முற்கூட்டிய அனுமதியைப் பெறாமல் சாட்டுறுத்துவதற்கான உரிமையை கொண்டிருக்கின்றது.

18. பொதுவான ஏற்பாடுகள்

i. ஏதேனும் சேவையை வழங்குவதில் அல்லது கட்டுப்படுத்தப்படமுடியாத சம்பவங்கள் உள்ளடங்கலாக அதனுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாலான எதேனும் காரணத்தினால் இதனகத்துக்கீழ் ஏற்பட்ட (நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ) ஏதேனும் கடப்பாடுகளை பூர்த்திசெய்வதிலான ஏதேனும் தோல்வி அல்லது தாமதத்திற்கு வங்கி பொறுப்புடையதாக காணப்படமாட்டாது.

ii. வங்கியானது வழங்கப்பட்ட ஏதேனும் உற்பத்திகள் மற்றும் சேவைகள் மற்றும் இனகத்துக்கீழான நியதிகள் மற்றும் நிபந்தனைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இணைக்க, மீட்ட, திருத்த அல்லது இரத்துச்செய்வதற்கான அதிகாரத்தை கொண்டுள்ளது. அத்தகைய ஏதேனும் இணைப்பு, மீட்டல், திருத்தம், ரத்துச்செய்தல் அல்லது மாற்றுதலானது வங்கிக் கிளைகளின் அறிவித்தல் பலகை/வங்கியின் உத்தியோகப்பூர்வ வலைத்தளம் அல்லது பத்திரிக்கை அல்லது விளம்பரம் அல்லது ஏனையவகையில் காட்சிப்படுத்துவதனால் என்னுடைய கவனத்திற்கு கொணரப்பட்ட அத்தகைய காலப்பகுதியிலிருந்து பயன்வலுவுறுவதுடன் என்னை பிணைப்பதாகவும் காணப்படும்.

iii. வங்கிக்கான அல்லது வங்கியினாலான தொலைபேசி அழைப்புக்கள் என்னுடையதும் அதேப்போன்று வங்கியினதும் நலனை பாதுகாப்பதற்காக பதிவுசெய்யப்படக்கூடும் என்பதனை நான் அறிந்துக்கொண்டு உடன்படுகின்றேன்.

iv. வங்கிக்கு வழங்கப்பட்ட அனைத்து தகவல்களும் (பணிப்பானை அல்லது ஏனைய வகையிலோ) என்னுடைய அறிவுக்கு உண்மையானதும் சரியானதும் என கட்டுறுத்துவதுடன் பணிப்பாணையை எந்நேரத்திலும் நிராகரிக்கவும் அல்லது என்னால் வழங்கப்பட்ட தகவல் தவறானது அல்லது பொய்யானது என அது கண்டடையும் சந்தர்ப்பத்தில் கணக்குகளை மூடவுமான அதிகாரத்தை கொண்டுள்ளது.

19. டிஜிட்டல் அல்லது இலத்திரனியல் வங்கிச்சேவை

i. நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழும் நிபந்தனைகளின் பிரகாரமும் என்னால் /எம்மால் திறக்கப்பட்ட தனிபட்ட கணக்குகளுடன் தொடர்புடையதாக எழுத்தில் வழங்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்தல்கள் மற்றும் /அல்லது அறிவித்தல்களானவை பௌதீக வடிவிலோ அல்லது டிஜிட்டல் முறையிலோ வழங்கப்படலாம் என்பதற்கு நான் உடன்பட்டு அறிந்துக்கொள்கின்றேன்.

ii. இலத்திரனியல் கையொப்பம்

இலத்திரனியல்ரீதியாக உட்சேர்க்கப்பட்ட கையெழுத்தானது வங்கிப் பரிமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சட்ட அதிகாரவளித்தலை குறிப்பிடுகின்றது என்பதனை நான் இத்தால் அறிந்துக்கொள்வதுடன், இலத்திரனியல் வழிகளில் உட்சேர்க்கப்பட்ட அத்தகைய யையொப்பங்களின் சட்டத்தன்மை, செல்லுபடியாந்தன்மை, பயனுறுத்தன்மை அல்லது அமுலாக்கத்திறன் என்பனவற்றினை நான் சவாலிற்குட்படுத்தலும் ஆகாது. இலங்கையின் சட்டங்களானவை இலத்திரனியல் கையொப்பங்களுக்கு சட்ட அங்கீகாரத்தினை வழங்கியுள்ளன என்பது புரிந்துக்கொள்ளப்பட்டுள்ளது.

iii. டிஜிட்டல் பணிப்பானை

பணிப்பானையானது டிஜிட்டல்ரீதியாக சமர்ப்பிக்கப்படும் என்பதனை நான் இத்தால் உடன்படுகின்றேன். என்னால் உள்ளிடப்பட்ட உண்மைகள் /தரவுகளை அறிந்துள்ளதாக நான் இத்தால் ஒப்புதலளிப்பதுடன் மேலும் என்னால் டிஜிட்டல்ரீதியாக நிரப்பப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்களின் ஒப்புரவு குறித்து நான் பொறுப்புத்துறத்தலாகாது என்பதனையும் உறுதியளிக்கின்றேன்.

iv. ஈட்டுறுதிப்படுத்தல்

ஏதேனும் கணக்கினை திறக்க, செயற்படுத்த, பேண அல்லது மூடுவதற்கு டிஜிட்டல் அல்லது இலத்திரனியல் வங்கிச்சேவைகளை நான் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில், இவ்வொப்பந்தத்தில் டிஜிட்டல்ரீதியாக நுழைவதானது சட்டப்பூர்வமானது எனவும் டிஜிட்டல்ரீதியாக இடம்பெறும் ஏதேனும் பரிமாற்றத்தின் சட்டத்தன்மையை சவாலிற்குட்படுத்தலாகாது என்பதிலும் நான் உடன்படுகின்றேன். மேலும் டிஜிட்டல்ரீதியாக இடம்பெறும் ஏதேனும் பரிமாற்றத்திற்கு அப்பால் எழும் அல்லது அதிலிருந்து விளைவாகும் ஏதேனும் மற்றும் அனைத்து கோரல்களிலிருந்தும் எதிராகவும் வங்கியை ஈட்டுறுதிப்படுத்துவதுடன் தீங்கற்றும் பேணுவேன்.

v. மின்னஞ்சல்/தொடர்புகொள்ளும் இலக்கம்

நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரதியொன்றினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக வங்கிக்கு சரியான மின்னஞ்சல் முகவரி அல்லது தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கத்ததை சமர்ப்பிப்பது என்னுடைய முற்றான பொறுப்பு என்பதில் நான் இத்தால் உடன்படுகின்றேன். பரிவர்த்தனைகளின் அறிவித்தல்களை பெற்றுக்கொள்வதற்காக செல்லுபடியான தொலைபேசி இலக்கத்தினை நான் சமர்ப்பித்துள்ளேன் எனவும் நான் மேலும் உடன்படுகின்றேன்.

20. அரலிய கணக்குகளுக்கு செல்லுபடியாகும் விசேட நியதிகளும் நிபந்தனைகளும்

i. 'NDB அரலிய' சேமிப்புக் கணக்கினைத் திறப்பதற்கான ஆரம்ப வைப்பு, அதன்பின்னரான குறைந்தபட்ச வைப்பு, வட்டி வீதம் மற்றும் கணிக்கும் முறை மற்றும் வட்டியை வரவிடல் என்பன வங்கியின் தற்போதைய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் தனிப்பட்ட கணக்கு திறக்கும் பணிப்பாணைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கியதாக காணப்படும்.

ii. 'NDB அரலிய' சேமிப்புக் கணக்கு உடைமையாளர் (கணக்குடைமையாளர்) கணக்கு (உறுதியளிக்கப்பட்ட கணக்கு) திறக்கும் நேரத்தில் வைப்பிலிடப்படுவதற்காக உறுதியளிக்கப்பட்ட தொகையை ஒவ்வொரு மாதமும் கணக்குக்கு வரவிலிடுதல் வேண்டும். குறைந்தபட்ச உறுதியளிக்கும் தொகையானது ரூபா.1000/- ஆகும்.

iii. ஒவ்வொரு மாதமும் கணக்குடைமையாளர் உறுதியளிக்கப்பட்ட தொகையை வைப்பிலிடுவதன்பேரில், அடுத்துவரும் மாதத்தின் துவக்கத்தில் கணக்கில் பெறத்தக்க வட்டியின்மீது மேலதிக வட்டி கொடுப்பனவை வங்கி செலுத்துதல்வேண்டும்.

iv. அம்மாதத்தில் கணக்குடைமையாளர் உறுதியளித்த தொகை வைப்பிலிடாத சந்தர்ப்பத்தில் அம்மாதத்திற்கு பெறத்தக்க மேலதிக வட்டி கொடுப்பனவினை கணக்குடைமையாளர் இழத்தல்வேண்டும்.

v. கணக்கிற்குள்ளான பண வைப்புக்கள் மற்றும் அதிலிருந்தான பணமீளப்பெறல்கள் அக்கணக்கு எங்கு திறக்கப்பட்டது என்பதனை கருத்திற்கொள்ளாது வங்கியின் எந்தவொரு கிளையிலும் மேற்கொள்ளப்படலாம்.

vi. வங்கியானது அதனது தனித்த முழுமையான தற்றுணிபின்பேரில் எந்நேரத்திலும் வட்டி வீதம் /வீதங்களை மாற்ற, செப்பமாக்க, அதிகரிக்க அல்லது குறைப்பதற்கு உரித்துடையதாதல்வேண்டும்.

vi. வட்டி வீதங்களின் மாற்றங்கள் குறித்த அறிவித்தல் அல்லது ஏதேனும் ஏனைய அறிவித்தல்கள் உள்ளுர் பத்திரிகைகளில் உள்ளிடப்பட்ட மற்றும்/அல்லது வங்கியின் வளாகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட மற்றும்/அல்லது வங்கி கூற்று ஊடான அறிவிப்பினால் வழங்கப்படுதல் வேண்டும் அத்துடன் கணக்குடைமையாளருக்கான காரியமானதும் போதுமானதுமான அறிவித்தலாக கருதப்படுதல்வேண்டும் அத்துடன் கணக்குடைமையாளரை பிணைப்பதாகவும் காணப்படுதல்வேண்டும்.

vii. காசோலைகள், காசுகட்டளைகள் முதலியன வங்கியின் தற்றுணிபினில் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படல்வேண்டும்.

ix. வங்கியினால் காலத்திற்கு காலம் குறித்துரைக்கப்படுகின்றவாறு குறைந்தபட்ச சராசரி நிலுவையை பேண கணக்குடைமையாளர் தேவைப்படுத்தப்படுகின்றார்.

x. மாதாந்த குறைந்தபட்ச சாராசரி நிலுவையை பேணுவதற்கு கணக்குடைமையாளர் தவறுகின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய தவறுகையிலான ஒவ்வொரு மாதத்திற்கும் கட்டணமொன்று தீர்வையாக்கப்படும்.

xi. கடவுப்புத்தகம்/மாதாந்த இ-கூற்றானது கணக்குடைமையாளரின் கோரிக்கையின்பேரில் வழங்கப்படும் என்பதுடன், அதனது பாதுகாப்பானது கணக்குடைமையாளரின் பொறுப்பில் காணப்படும். கடவுப்புத்தகமானது தொலைந்தாலோ, திருடப்பட்டாலோ அல்லது தவறாக இடம்பெற்றாலோ/நியமிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரி அல்லது எவரேனும் ஏனைய நபரின் அதிகாரமளிக்கப்படாத பயன்பாட்டின் உட்செருகையினால் இ-கூற்றானது விநியோகிக்கப்படாதிருந்தாலோ வங்கிக்கு கட்டாயமாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

xii. கணக்கு விபரங்களை இ-கூற்றுக்கள் வழியாக அல்லது கடவுப்புத்தகத்தை புதுப்பிப்பதன் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

xiii. கணக்குடைமையாளர் தன்னுடைய கடவுப்புத்தகத்தை கிரமமாக புதுப்பித்துக்கொள்ளல்வேண்டும் மற்றும் வங்கியை விட்டு வெளியேறுவதற்கு முன்னதாக, கணக்குடைமையாளரின் திருப்தியில் அனைத்து வைப்புக்கள், வட்டி மற்றும் மீளப்பெறல்களானவை சரியாக பதிவுசெய்யப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளல்வேண்டும்.

xiv. பணமீளப்பெறல்களானவை கடவுப்புத்தகத்தின் சமர்ப்பணத்தின்மீது முறையாக பூரணப்படுத்தப்பட்ட பணமீளப்பெறல் படிவத்தின் ஊடாகவும், அதேப்போல ATM ஊடாகவும் மேற்கொள்ளப்படமுடியும். கடவுப்புத்தகம் மற்றும் கணக்குடைமையாளரினால் கையொப்பமிடப்பட்டுள்ளதாக கருதப்படும் பணமீளப்பெறல் படிவத்தினை சமர்ப்பிக்கும் திறத்தவருக்கான வங்கியினாலான கொடுப்பனவுகளானவை யாரேனுமான நபர் எவரினதும் பாகத்திலாக மோசடி, ஏய்ப்பு அல்லது நேர்மையீனம் எதுஎவ்வாறாயினும், மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு தொடர்பில் கணக்குடைமையாளருக்கான அனைத்து பொறுப்புக்களிலிருந்தும் வங்கியை விடுவித்தாதல்வேண்டும்.

xv. வங்கிக்கான கணக்குடைமையாளரின் அனைத்து பொறுப்புக்களினதும் தீர்வைகள் மற்றும் ஏதேனும் ஏனைய கட்டணங்களை கோருவதனாலும் மற்றும் கணக்குடைமையாளருக்கான நிலுவைப் பணங்களினை திரும்பவழங்கியும் கணக்குடைமையாளருக்கான நியாயமான அறிவித்தலை வழங்குவதனால் இவ் 'அரலிய சேமிப்புக் கணக்கு' உற்பத்தியினை நிறுத்தும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

xvi. கடவுப்புத்தகம் தொலைந்துபோன அல்லது சேதமடைந்துள்ள சந்தர்ப்பத்தில், திருப்திகரமான விளக்கம் போதுமான ஈட்டுறுதிப்படுத்தலின் பேரில், கணக்குடைமையாளரினால் சரியானதென ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக கணக்குடைமையாளரினால் பயனுறுத்தப்பட்ட பரிமாற்றங்களின் விபரங்களை உள்ளடக்கிய புதிய கடவுப்புத்தகத்தினை விநியோகிக்கலாம். கடவுப்புத்தகமொன்றின் மீள்வழங்கலுக்கான கட்டணமானது செல்லுபடியானதாகும்.

xvii. கணக்குடைமையாளர் முகவரி உள்ளிட்ட கணக்குடைமையாளரின் தனிப்பட்ட விபரங்களிலான ஏதேனும் மாற்றத்தினை தாமதமின்றி வங்கிக்கு அறிவித்தல்வேண்டும்.

xviii. கணக்குடைமையாளருக்கான அறிவித்தலுடன் எந்நேரத்திலும் கணக்குக்கு செல்லுபடியாகும் நிபந்தனைகளை இணைப்பதற்கும் மாற்றுவதற்குமான உரிமையினை வங்கி கொண்டுள்ளது

xix. இந்நியதிகளும் நிபந்தனைகளும் தனிப்பட்ட டிஜிட்டல் கணக்கு திறக்கும் பணிப்பானைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணைத்து வாசிக்கப்படுதல் வேண்டும்.

xx. தனிப்பட்ட டிஜிட்டல் கணக்கு திறக்கும் பணிப்பானைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அரலிய கணக்குகளின் இக்குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அரலிய கணக்குகளிற்கு செல்லபடியாகும் இக்குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மேலோங்கி காணப்படுதல்வேண்டும்.

xxi. சந்தை நிலைமைகளை பொறுத்து தற்போதிருக்கும் பரிசுத் திட்டங்களை மாற்றுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளதுடன் அம்மாற்றங்களானவை வங்கியின் வலைத்தளத்தில் காணப்படும் என்பதுடன் வங்கியின் ஒவ்வொரு கிளையின் அறிவித்தல் பலகையிலும் பதிவிடப்படும்.

21. ரியல் சேவர் கணக்குகளுக்கு செல்லுபடியாகும் விசேட நியதிகளும் நிபந்தனைகளும்

i. NDB ரியல் சேவர் சேமிப்புக் கணக்கினைத் (கணக்கு) திறப்பதற்கான ஆரம்ப வைப்பு, அதன்பின்னரான குறைந்தபட்ச வைப்பு, வட்டி வீதம் மற்றும் கணிக்கும் முறை மற்றும் வட்டியை வரவிடல் என்பன வங்கியின்

தற்போதைய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் தனிப்பட்ட கணக்கு திறக்கும் பணிப்பாணைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கியதாக காணப்படும்.

ii. கணக்கு உடைமையாளர் கணக்கு (உறுதியளிக்கப்பட்ட கணக்கு) திறக்கும் நேரத்தில் வைப்பிலிடப்படுவதற்காக உறுதியளிக்கப்பட்ட தொகையை ஒவ்வொரு மாதமும் கணக்குக்கு வரவிலிடுதல் வேண்டும். குறைந்தபட்ச உறுதியளிக்கும் தொகையானது ரூபா.1000/- ஆகும்.

iii. ஒவ்வொரு மாதமும் கணக்குடைமையாளர் உறுதியளிக்கப்பட்ட தொகையை வைப்பிலிடுவதன்பேரில், அடுத்துவரும் மாதத்தின் துவக்கத்தில் கணக்கில் பெறத்தக்க வட்டியின்மீது மேலதிக வட்டி கொடுப்பனவை வங்கி செலுத்துதல்வேண்டும்.

iv. அம்மாதத்தில் கணக்குடைமையாளர் உறுதியளித்த தொகை வைப்பிலிடப்படாத சந்தர்ப்பத்தில் அம்மாதத்திற்கு பெறத்தக்க மேலதிக வட்டி கொடுப்பனவினை கணக்குடைமையாளர் இழத்தல்வேண்டும்.

v. கணக்கிலிருந்தான பணமீளப்பெறலானது மாதத்திற்கொரு பணமீளப்பெறல் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு நாட்காட்டி மாதத்திற்குள் கணக்கிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட பணமீளப்பெறலினை கணக்குடைமையாளர் மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில், பின்னர், அம்மாதத்திற்காக வாசகம் 3 இன் நியதிகளில் பெறத்தக்க மேலதிக வட்டி கொடுப்பனவை கணக்குடைமையாளர் இழக்கவேண்டியேற்படும்.

vi. கணக்கிற்குள்ளான பண வைப்புக்கள் மற்றும் அதிலிருந்தான பணமீளப்பெறல்கள் அக்கணக்கு எங்கு திறக்கப்பட்டது என்பதனை கருத்திற்கொள்ளாது வங்கியின் எந்தவொரு கிளையிலும் மேற்கொள்ளப்படலாம்.

vii. சேமிப்பு பழக்கத்தினை ஊக்கப்படுத்துவதற்காக கடனட்டையானது இக்கணக்கிற்கு வழங்கப்படமாட்டாது.

viii. பணமீளப்பெறல்களானவை கடவுப்புத்தகத்தின் சமர்ப்பணத்தின்மீது முறையாக பூரணப்படுத்தப்பட்ட பணமீளப்பெறல் படிவத்தின் ஊடாக மேற்கொள்ளப்படமுடியும். கடவுப்புத்தகம் மற்றும் கணக்குடைமையாளரினால் கையொப்பமிடப்பட்டுள்ளதாக கருதப்படும் பணமீளப்பெறல் படிவத்தினை சமர்ப்பிக்கும் திறத்தவருக்கான வங்கியினாலான கொடுப்பனவுகளானவை யாரேனுமான நபர் எவரினதும் பாகத்திலாக மோசடி, ஏய்ப்பு அல்லது நேர்மையீனம் எதுஎவ்வாறாயினும், மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு தொடர்பில் கணக்குடைமையாளருக்கான அனைத்து பொறுப்புக்களிலிருந்தும் வங்கியை விடுவித்தாதல்வேண்டும்.

ix. காசோலைகள், காசுகட்டளைகள் முதலியன வங்கியின் தற்றுணிபினில் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படல்வேண்டும்.

xi. ஒவ்வொரு கணக்குடைமையாளருக்கும் கடவுப்புத்தகமொன்று வழங்கப்படும் என்பதுடன், அதனது பாதுகாப்பானது கணக்குடைமையாளரின் பொறுப்பில் காணப்படும். கடவுப்புத்தகமானது தொலைந்தாலோ, திருடப்பட்டாலோ அல்லது தவறாக இடம்பெற்றாலோ வங்கிக்கு கட்டாயமாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

xii. கணக்குடைமையாளர் தன்னுடைய கடவுப்புத்தகத்தை கிரமமாக புதுப்பித்துக்கொள்ளல்வேண்டும் மற்றும் வங்கியை விட்டு வெளியேறுவதற்கு முன்னதாக, கணக்குடைமையாளரின் திருப்தியில் அனைத்து வைப்புக்கள், வட்டி மற்றும் மீளப்பெறல்களானவை சரியாக பதிவுசெய்யப்பட்டுள்ளன என்தனை உறுதிப்படுத்திக்கொள்ளல்வேண்டும். கணினியில் அச்சிடப்படாததோ அல்லது வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் கையெழுத்தின்கீழ் உள்ளிடப்படாததோவான ஏதேனும் பதிவின் எவையேனும் பொறுப்புக்களை வங்கி ஏற்றுக்கொள்ளலாகாது.

xiii. வங்கிக்கான கணக்குடைமையாளரின் அனைத்து பொறுப்புக்களினதும் தீர்வைகளை கோருவதனாலும் மற்றும் கணக்கிலுள்ள நிலுவைப் பணங்களினை வங்கியின் சாதாரண சேமிப்புக் கணக்கில் திரும்பவழங்கியும் கணக்குடைமையாளருக்கான நியாயமான அறிவித்தலை வழங்குவதனால் இந்த NDB ரியல் சேவர் சேமிப்புக் கணக்கு உற்பத்தியினை நிறுத்தும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

xiv. கடவுப்புத்தகம் தொலைந்துபோன அல்லது சேதமடைந்துள்ள சந்தர்ப்பத்தில், திருப்திகரமான விளக்கம் போதுமான ஈட்டுறுதிப்படுத்தலின் பேரில், கணக்குடைமையாளரினால் சரியானதென ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக கணக்குடைமையாளரினால் பயனுறுத்தப்பட்ட பரிமாற்றங்களின் விபரங்களை

உள்ளடக்கிய புதிய கடவுப்புத்தகத்தினை விநியோகிக்கலாம். கடவுப்புத்தகமொன்றின் மீள்வழங்கலுக்கான கட்டணமானது செல்லுபடியானதாகும்.

xv. கணக்குடைமையாளர் முகவரி உள்ளிட்ட கணக்குடைமையாளரின் தனிப்பட்ட விபரங்களிலான ஏதேனும் மாற்றத்தினை தாமதமின்றி வங்கிக்கு அறிவித்தல்வேண்டும்.

xvi. கணக்குடைமையாளருக்கான அறிவித்தலின்றி எந்நேரத்திலும் கணக்குக்கு செல்லுபடியாகும் நிபந்தனைகளை இணைப்பதற்கும் மாற்றுவதற்குமான உரிமையினை வங்கி கொண்டுள்ளது.

xvii. இந்நியதிகளும் நிபந்தனைகளும் தனிப்பட்ட டிஜிட்டல் கணக்கு திறக்கும் பணிப்பானைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணைத்து வாசிக்கப்படுதல் வேண்டும்.

xviii. தனிப்பட்ட டிஜிட்டல் கணக்கு திறக்கும் பணிப்பானைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் ரியல் சேவர் கணக்குக்கு செல்லுபடியாகும் இக்குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில், ரியல் சேவர் கணக்குகளிற்கு செல்லுபடியாகும் இக்குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மேலோங்கி நிற்றல்வேண்டும்.

22. ஆளும் சட்டங்கள்

அரலிய கணக்குக்கு செல்லுபடியாகும் இக்குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் மற்றும் ரியல் சேவர் கணக்குக்கு செல்லுபடியாகும் இக்குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் இலங்கை சட்டங்களிற்கு இணங்க ஆளப்பட்டு பொருள்கொள்ளப்படவேண்டும் மற்றும் இலங்கை நீதிமன்றங்களின் பிரத்தியேக நியாயாதிக்கத்திற்கு மீளப்பெறப்படமுடியாதவாறு இத்தால் நான் சமர்ப்பணம் செய்கின்றேன். அத்தகைய சமர்ப்பணமானது, எவ்வாறாயினும், ஏதேனும் ஏனைய நியாயாதிக்கத்தில் எனக்கு எதிராக வழக்காடல்களை கொணருவதற்கான வங்கியின் உரிமைக்கு தீங்கானதாகவிருத்தலாகாது.

23. நியதிகளினதும் நிபந்தனைகளினதும் ஏற்பு

வங்கியினால் அதனது உத்தியோகப்பூர்வ வலைத்தளத்தில் எனக்கு கிடைப்பனவாக்கப்பட்ட தனிப்பட்ட டிஜிட்டல் கணக்குகளுக்கு செல்லுபடியாகும் இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அரலிய கணக்குக்கு செல்லுபடியாகும் இக்குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ரியல் சேவர் கணக்குக்கு செல்லுபடியாகும் இக்குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றை நான் வாசித்து புரிந்துக்கொண்டுள்ளேன் என்பதனை நான் உறுதிப்படுத்துவதுடன் மேற்கூறப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஏற்புக்கான அடையாளமாக பணிப்பாணையை டிஜிட்டல்ரீதியாக/இலத்திரனியல்ரீதியாக கையொப்பமிட்டுள்ளேன்.